## IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 319/2013 P.W. 3/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. வேலுமயில் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.03.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுனராக வேலைச் செய்து வருகிறேன். 18.11.2009 ம் தேதி நான் குளச்சல் பஸ்நிலையத்தில் ஆட்டோ ஓட்டுனர் சங்க தலைவராக இருந்தேன். அப்போது ஆட்டோ ஓட்டிய எங்கள் சங்கத்தைச் சார்ந்த ஒரு நபர் தாக்கப்பட்டதாக ஆட்டோ சங்கத்தில் உள்ளஉறுப்பினர்கள் கூறினார்கள். நான் உடனே சம்பவம் நடந்த இடமான பத்தறை என்ற இடத்திற்குச் சென்றேன்.

2. அப்போது அங்கு 2 போலீசார்கள் அந்தயிடத்தைப் பார்த்து படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். சம்பவயிடம் குறித்து எழுதிய பேப்பரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகும்.** என்னுடன் பிரபு என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

நான் 18.11.2009 ம்தேதி நடந்த சம்பவத்திற்கு தான் போய் பார்த்தேன். என்னிடம் கையொப்பம் பெற்ற பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் அடிச்சி போட்டார்கள், ஆஸ்பத்திரியில இருக்காங்க, கையெழுத்து வேண்டுமென்று கேட்டதால்

கையெழுத்துப்போட்டேன். காவல்நிலையத்தில் வைத்துப் போட்டுக்கொடுத்தேன்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்